# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்.,
# மாவட்ட மேலாளர் அலுவலகம், தேனி மாவட்டம்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண் : **2929/2021/அ5** நாள் : 13.12.2021

**தலைமை அலுவலக கடித எண்:Q-6/10999/2018, நாள்: 13.12.2021**

(மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்ட விற்பனை மற்றும் அன்றாடம் நுகர்வோர் விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ள 01.01.2022 முதல் 31.12.2023 வரை(24 மாதங்கள்) அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விவரம்)

தேனி மாவட்டத்திலுள்ள டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடத்தில் தின்பண்ட விற்பனை மற்றும் அன்றாடம் நுகர்வோர் விட்டுச்செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்படுகிறது. மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்ப படிவம் **14.12.2021** முதல் **30.12.2021** வரை மட்டும் அனைத்து அலுவலக வேலை நேரத்தில் (சனிக்கிழமை உட்பட) வழங்கப்படும். விண்ணப்ப படிவம் பெற வேண்டிய கடைசி நாள் 30.12.2021, நேரம் நண்பகல் 12.00 மணி வரை விண்ணப்பப் படிவங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் அல்லது தபால் மூலமாக பெற மாவட்ட மேலாளர், தேனி மாவட்டம் தமிழ்நாடு மாநில வாணிப கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான **கடைசி** நாள் **30.12.2021** பிற்பகல் **3.00** மணி வரை ஆகும்.

- செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத்தொகை **(E.M.D)**
  மாநகராட்சி /நகராட்சி பகுதி ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)
  பேரூராட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
  உள்ளாட்சி அமைப்புகள் வாரியாக பகுதிகள் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)
- பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்ட மேலாளர் அலுவலக முகவரியில் நாள் **30.12.2021 பிற்பகல் 4.00** மணிக்கு திறக்கப்படும்.

**உள்ளாட்சி அமைப்புகளின் வாரியாக குறுமத் தொகை கணக்கிடுதல் மற்றும் ஒப்பந்தத்தாரர் தேர்வு செய்தல் சம்மந்தமான நிபந்தனைகள்:-**

(அ) மாநகராட்சி/நகராட்சிக்கு பகுதிகளில் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடையின் ஜீன் 2020 முதல் மார்ச் 2021 வரை சராசரி மாத விற்பனையில் குறைந்தபட்சம் 1.80 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பேரூராட்சி பகுதிகளில் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடையின் ஜீன் 2020 முதல் மார்ச் 2021 வரை சராசரி மாத விற்பனையில் குறைந்தபட்சம் 1.60 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(இ) ஊராட்சி பகுதிகளில் உள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடையின் ஜீன் 2020 முதல் மார்ச் 2021 வரை சராசரி மாத விற்பனையில் குறைந்தபட்சம் 1.40 சதவீதம் குறுமத்தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 01.04.2020–க்கு பிறகு 31.03.2021–க்கு முன் திறக்கப்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அந்த மதுபான சில்லறை விற்பனைக் கடையின் 2020–21ம் நிதியாண்டின் மொத்த விற்பனைத் தொகையை அந்தக் கடை செயல்பட்ட நாட்களால் வகுத்து ஒரு நாள் சராசரி விற்பனைத் தொகையினை 30 நாட்களால் பெருக்கி ஒரு மாத சராசரி விற்பனைத் தொகையினை பெற்றிட வேண்டும்.
- 01.04.2021–க்கு பிறகு திறக்கப்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அந்த மதுபான சில்லறை விற்பனைக் கடை மொத்த விற்பனைத் தொகையை அந்தக் கடை செயல்பட்ட நாட்களால் வகுத்து ஒரு நாள் சராசரி விற்பனைத் தொகையினை 30 நாட்களால் பெருக்கி ஒரு மாத சராசரி விற்பனைத் தொகையினை பெற்றிட வேண்டும்.
- ஒரு மாதத்திற்கு குறைவாக செயல்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அல்லது புதியதாக எதிர்வரும் காலங்களில் திறக்கப்பட்டால் அந்த மதுபான சில்லறை விற்பனைக் கடையின் மொத்த விற்பனைத் தொகையை அந்தக் கடை செயல்பட்ட நாட்களால் வகுத்து (குறைந்தபட்சம் 15 நாட்கள் செயல்பட்டிருக்க வேண்டும்) ஒரு நாள் சராசரி விற்பனைத் தொகையினை 30 நாட்களால் பெருக்கி ஒரு மாத சராசரி விற்பனைத் தொகையினை பெற்றிட வேண்டும்.

இந்த ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ரூ.525/– (GST உள்பட) வரைவோலை செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். இந்த ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை http://www.tenders.tn.gov.in , http://www.tasmac.co.in and http://www.nic.theni.in என்ற இணையதளத்தில் காணலாம் மற்றும் விண்ணப்பப் படிவத்தை இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்.

மாவட்ட மேலாளர், டாஸ்மாக் லிட்.
தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம், கருவேல்நாயக்கன்பட்டி,
குன்னூர் அஞ்சல், தேனி - 625531, தேனி மாவட்டம்.